**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 237 | of | 2019 |

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **நெல்சன் சாமுவேல்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-19.09.2025**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் கோரி மனு தாக்கல் செய்யவில்லை. காட்டப்பட்ட ஆவணம் நான் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Crl.OP.Nos. 15312 & 14284/2020 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவில் எனக்கு முன் ஜாமின் வழங்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவு **பி.வா.சா.ஆ.11** ஆகும். பி.வா.ச.ஆ.11 ல் வாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள் ராஜேஷ் மற்றும் காட்வின் வில்சன் ஆகியோரும் மனுதாரர்கள் என்றால் சரிதான். அந்த உத்தரவில் ரூ.7 லட்சத்து 50 ஆயிரம் வைப்பீடு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தொகை ரூ.7 லட்சத்து 50 ஆயிரம்

வைப்பீடு செய்யவில்லை. எனவே, அதில் புகார்தாரர் முன் ஜாமின் உத்தரவை தள்ளுபடி செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு **பி.வா.சா.ஆ.12** ஆகும். 6 UDS விற்தற்கான வில்லங்கச் சான்றிதழ் **பி.வா.சா.ஆ.13** ஆகும். பி.சா.ஆ.13 ல் வரிசை எண்.3 ல் ரூ.12,49,500/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 2 ல் ரூ.32,00,500/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 4 ல் ரூ.33,14,050/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 5 ல் ரூ.12,49,500/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 7 ல் ரூ.43,22,390/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 8 ல் ரூ.7,92,610/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 11 ல் ரூ.29,08,240/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 12 ல் ரூ.7,69,160/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 14 ல் ரூ.35,23,510/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. வரிசை எண் 16 ல் ரூ.37,07,390/- என கைமாற்றல் தொகை சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 முதல் 8 ல் 3 ம் பிரதிவாதியின் பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் 3 முதல் 8 ல் 1 வது சாட்சி பெயர் ஜானகிராமன் ஆகும். வா.சா.ஆ.-1,2 ல் 3 ம் பிரதிவாதியின் பெயர் இடம் பெறவில்லை. அதில் 2 வது சாட்சியாக ஜானகிராமன் பெயர் உள்ளது. வா.சா.ஆ.4 அறிவிப்பு 3 ம்பிரதிவாதிக்கு அனுப்பப்படவில்லை. 3 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் சகோதரி என்ற

முறையில் அவர் அனைத்து பரிவர்த்தனைகளிலும் ஈடுபட்டதன் காரணமாக அவரை தரப்பினராக சேர்த்தேன். இந்த விவரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் வழக்குரையை முழுவதுமாக படித்து பார்த்தால்தான் சொல்ல முடியும்.

வழக்குரையை படித்துப் பார்க்க வேண்டி குறுக்கு விசாரணை தொடர்ச்சி தள்ளி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu